உ

சிவமயம்

நாற்பத்தோன்பதாவது

## அகஸ்திய மகாமுனிவர்

# ஞானோபதேசம்—14

ஆதியந்தமில்லாதசிவன் மயத்தின்பாதம்
அகண்டபரிபூரணமா மாந்தாள்பாதம்
சோதிநிறமாகிநின்ற கணேசன்பாதஞ்
சொல்தனக்கெட்டாத சுடரின்பாதம்
வீதியென்றபராபரத்தி நந்திபாதம்
வேதாந்தசாஸ்திரத்தின் வெளியின்மார்க்கஞ்
சோதியெனுமென்றதனி னடனஞ்செய்யுஞ்
சுடரொளியினபாதமது காப்புத்தானே. 1

தானென்றஞானிக்கி குளிகையொன்று
சாற்றுகிறேன்புலத்தியனே சார்ந்துகேளு
தேனென்றகண்மணியே யுனக்காய்ச்சொன்னேன்
சேர்ந்துநின்றவாசியல்லோ மூலியாகும்
மானென்றஅக்கினியே பீடமாகும்
மக்களோரசமணியின் மார்க்கத்தாலே
ஊனென்றசமாதனை மணிபோற்செய்தால்
உத்தமனேகெவனத்தி லோடலாமே. 2

ஓடலாம்பாசத்தி னடியிற்குள்ளே
    ஓகோகோசொக்கிலிக்கு மணியின்மார்க்கங்
காடெல்லாந்திரிந்தலைந்து ரசத்தைவாங்கி
    கட்டியொருமணியாகச் செய்யவன்றே
நாடெல்லாமாயிரத்தோ ருவுத்தமாண்பர்
    நாடாதேயவரிடத்தில் நரகமாவாய்
பாடெல்லாம்பட்டலைலா விந்தைக்கட்ட
    பரப்பிர்மமணியாகும் பாருபாரே. 3

பாரப்பாவிந்துவைத்தான் மணியாய்ச்செய்ய
    பாடுகிறேன்புலத்தியனே வையாகேளு
வீரப்பாவுன்னிடத்தில் வாசிதன்னை
    விதமாஸ்தம்பத்துள் ளடக்கியேத்து
காரப்பாவாசிதன்னை ஸ்தம்பனமேசெய்ய
    காட்டுகிறேன்கபாலத்தில் கண்டுகொள்ளு
வீரப்பாநுணிநாக்கை அண்ணாங்கில்மோதி
    விளங்கிநின்றமாதனையு லடைத்துப்பாரே. 4

அடைக்கியிலேலரும்மென்று யிருட்டுகாணும்
    அலைத்துவிடும் திரேகத்தைமலைக்கவேண்டாம்
உடைக்கையிலேயவ்விடத்தில் சத்தங்காணும்
    ஓடுகின்றகூடொளியுங் கதிரும்வீசும்

படைக்கையிலேவிழியிரண்டு மறைக்கன்பாரு
பருமூக்குசுழிமீதிர் குறிப்பாய்பாரு
கடைக்கையிலேகாதிரண்டு மசைவுகாணும்
கண்டத்தில்வாசல்கத வடைக்கும்பாரே. 5

பாரப்பாவடைத்துவிடும் வாசலேழும்
பண்பானவாசியது கீழேநோக்குஞ்
சேரப்பாவாசியது யிருக்கும்போது
சிவமென்றேசுழிமுனையை யறிந்துக்கொள்ளு
ஆரப்பாலிங்கவட்டம் அபானவாயல்
அடைக்குமடாநந்தியுட வேகந்தானே. 6

தானென்றவாசியது பீஜஞ்சொல்லுஞ்
சரிவரவேசென்றபின்பு சொல்லக்கேளு
மானென்றகபாலமெல்லாம் விம்மலாகும்
மயங்காமற்கவனத்தா லுள்ளேசெல்லுந்
தேனென்றதிடர்கம்பங் கொதிப்புக்கொள்ளுஞ்
சொல்லவென்றால் மனமங்கேமயக்கங்காணும்
ஓமென்றமனத்தாலே கும்மத்தோடே
ஒதுங்கிபீஜத்தில் மனத்தையூணே. 7

ஊணவேவாசியது மேலேநோக்கு
முப்புகுந்துகண்டுவழி யோடும்பாரு

காணவேசுடர்கம்பம் நரம்புஒன்று
காணதுக்கள் அஞ்சுமாம்
வேணதுவேயதுவழியே வாசியோடி
வேகமடாகமலத்தின் அண்டத்துள்ளே
யாணவேவமுர்த்தத்தில் வாசிநிற்கும்
வப்பவல்லோவக்கினியு மதிகமாமே. 8

அதிகமென்றஅக்கினியோ கதிரோகோடி
ஐயையோகண்ணிமைக்கு ளடங்குமோசொல்
கதிகமென்றவிந்துவைத்தான் வாசிகாணும்
பம்பரம்போற்சுத்தியல்லோ யணிபோற்பண்ணு
பதிகமென்றவிந்துமணி சாரணையோசெய்ய
காட்டுகிறேன்புலத்தியனே கருதிக்கேளு
உதகமென்றதுணிநாக்கை யனுப்போல்நீக்கி
உருண்டுவருமணியுடனே வாசிபாரே. 9

பாரப்பாவிந்துமணி வாசிகூடப்
படிரொன்றுயிறக்கிவிடும் பீஜத்துள்ளே
காரப்பாநந்திபுட வழியிற்செல்லுங்
காணதற்குட்சூழுண்டு சிக்கிக்கொள்ளும்
பாரப்பாவவ்விடத்தி னக்கினியின்வீடு
வப்பவல்லோ அண்ணாக்கிற்றிறந்துமூடுஞ்

சோப்பானுருந்திறந்து வுட்சிவந்து
சிவசிவாவுருகிநிற்குஞ் சாரணையாயெண்ணே. 10

எண்ணவே நூற்றெட்டுச் சாரணையேபாரு
யேகுமடாவண்டத்தில் மணியின்வேக
முண்ணவேமுன்னாக்கை அரைவாசிவாங்கு
மோடிவருங்கபாலத்தில் மணிதானப்பா
கண்ணவேபிண்டத்தில் அணையைவைத்து
கபாலமதைபெருவாசல் மூடும்போது
நண்ணவேசடலத்தை உயரத்தூக்கும்
நாவிரண்டுவரைவரைக்குஞ் சேர்க்கும்பாரே

சேர்க்கவே அண்டமுதற் றிசைகளெட்டுஞ்
சுழன்றுவரும்நிமிஷத்தில் மணியின்வேகம்
தாக்கவேமுன்போலே கதவைமூடே
க்ஷணத்திலேகம்ப நுனி மேலேசெல்லும்
சிக்காதேகதவி நுனி சற்றேநீக்கி
சிறப்பாகநாடிவரு மணி தானப்பா
கார்க்கவே ரசமணியின் மார்க்கஞ்சொன்னேன்
கண்டுகொள் ஞபதினறிவின் காட்சியாமே. 12

ஆமென்றரசமணியின் வேகத்தாலே
அண்டர்களுமுனிவர்களு மயங்கினார்கள்

தேனென்றயிம்முறையைச் சொன்னேன்யானுஞ்
சிவஞானிமவுனிக்கிச் சொன்னதல்லால்
ஊனுண்டுபிறந்திறக்கு மாண்பருக்கு
முனுத்தருக்குயிம்முறையைச் சொன்னையானல்
ஊனென்றகமுதையுட சென்னமாகிக்
கடைப்பிறப்பாய்ப்பிறந்திடுவாய் கருதிப்பாரே.

பார்க்கையிலேயிம்முறையைச் சொன்னையானல்
பாழானரகமெய்தும் பாருபாரு
கார்க்கையிலேசீஷனுட மனதைக்கண்டு
கைமுறையாய்ச் சொல்லிவிடுஞானமார்க்கம்
யேர்க்கவேரசமணியின் மார்க்கந்தானு
மேன்மக்கள்சொல்லிவிட்டேனெழும்புவார்க்கஞ்
சேர்க்கவேயிம்முறையை யுனக்குச்சொல்வேன்
செழுங்கருணை பதினாலு தீர்க்கமுற்றே. 14

அகஸ்தியர் ஞானோபதேசம் - 14

முற்றிற்று.